ஷா

தியான லிங்கத்திற்கு ஒரு அணிகலன்- தியான பைரவி!

யோக விஞ்ஞானத்தின் சாரமாகத் திகழ்கிற தியானலிங்கம் பொருள் தன்மை மற்றும் பொருள் தன்மைக்கு அப்பாற்பட்ட நிலை ஆகிய இரண்டு வகைகளிலுமே அதிசயமான ஒன்றாகத் திகழ்கிறது. அளவுகடந்த இதன் சக்தி மையம் ஒருவரை எல்லைக்குட்பட்ட நிலையிலிருந்து பிரகாசமான எல்லையற்ற நிலைக்கு ஒரு நொடியில் மாற்றவல்லது. உலகிற்கு இந்த அற்புத வாய்ப்பை நல்கும் தியானலிங்கத்திற்கு ஒரு தகுதி வாய்ந்த அணிகலனை அளிக்கும் முயற்சியாக பரிக்ரமா விரிவாக்கத் திட்டம் சமீபத்தில் துவக்கப்பட்டது.

தியானலிங்கத் திருக்கோவிலுக்குச் செல்லும் நடைபாதையில் முழு கலைத்திறனையும் ஆன்மிக வெளிப்பாடுகளையும் பார்க்க முடியும். கோவிலுக்கு வரும் பக்தர்கள் தியானலிங்கத்தின் சக்திகளை முழுமையாகப் பெற்று ஆழ்ந்த தியானத் தன்மையை உணரும் பொருட்டு, உள் பரிக்ரமா விஷேசமாக உண்டாக்கப்பட்டுள்ளது. தற்போது கட்டுமானத்தில் உள்ள வெளிப் பரிக்ரமா பல ஆன்மிக நுட்பங்களையும் கலை நுணுக்கங்களையும் உள்ளடக்குவதாக இருக்கிறது.

மனித வளர்ச்சியில் காணப்படும் மூன்று நிலைகளான தமஸ், ரஜஸ் மற்றும் சத்வ ஆகிய அடிப்படை குணங்களைச் சித்தரிக்கும் விதமாக ஹரா, ருத்ரா மற்றும் சதாஷிவா ஆகிய ஷிவாவின் மூன்று அற்புத அம்சங்களைக் கொண்ட ஒரு கல்லாலான திருமூர்த்தி சிலைகள் தியான லிங்கத் திருக்கோவிலின் வளைகூரைக்குப் பின்னே நிறுவப்பட்டுள்ளது.

லிங்கத்தின் பெண்ணுருவமாக உணர்ச்சியின் எழுச்சியோடும், தெய்வீகத்தின் பெண்மையான வெளிப்பாடாகவும் விளங்கும் லிங்க பைரவி ஆற்றல் நிறைந்தது மற்றும் வண்ணமயமானது. தியானலிங்க வளாகத்தின் தென்மேற்கு மூலையில் நிறுவப்பட இருக்கும் இந்த தேவி, இம்மண்ணுக்குரியவளாக- தாயின் இருப்பாக- மிக உயர்ந்த பண்புகள் கொண்ட முழுமையான பெண்ணாக- விளையாட்டுப் போக்காக- அதே நேரத்தில் மிக கருணையுடனும் திகழ்கிறாள்.

வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ள இரசலிங்கத்துடன் கூடிய தீர்த்தகுண்டம், மந்தமான

உயிர்சக்தியைப் புதுப்பித்து ஆன்மிகத்திற்கு இட்டுச் செல்லும் மற்றொரு அற்புத கருவியாக உள்ளது. சக்தியூட்டப்பட்ட இதன் நீர் பூமிக்கு அடியில் 35 அடிக்குக் கீழ் அமைந்துள்ளது. தீர்த்த குண்டத்தின் சுவர்கள் பெரும் கிரானைட் கற்களால் கட்டப்பட்டுள்ளதுடன் அதன் கூரையில் மகா கும்பமேளா காட்சிகள் இயற்கைச் சாயங்களால் சித்திரமாகவும் வரையப்பட்டுள்ளது. சக்தியூட்டப்பட்ட இதன் நீரினுள் மூழ்கி எழுவது ஒருவரின் உடல், மனநலனை மேம்படுத்துவதுடன் ஒருவர் ஆன்மிக ரீதியாகப் பெறுகிற தன்மையையும் அதிகப்படுத்துகிறது.

பாரம்பரிய மற்றும் அரிதான மலர்களைக் கொண்டு, மதி மயக்கும் பல வண்ணத் திரைச்சீலையாக இருக்கப் போகும் அழகிய நந்தவனம் தியானலிங்கத்திற்கு ஓர் அர்ப்பணிப்பாக விளங்கவுள்ளது.

தியானலிங்க வளாகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தனித்துவமும் சக்தியும் வாய்ந்த சாதனா மண்டபத்தில் ஒருவரின் வாழ்வில் மாற்றத்தை வழங்கவல்ல யோகப் பயிற்சிகள், ஈஷா ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் வழங்கப்பட உள்ளன.

அடுத்து அமைந்துள்ள ஒலி- ஒளி மண்டபத்தில் தியானலிங்கம், சத்குரு, ஈஷா அறக்கட்டளை மற்றும் அதன் எண்ணற்ற பணிகள் பற்றிய தகவல்கள் ஒளிபரப்பாக உள்ளன.

கலைநுட்பம் வாய்ந்த ஈஷா கூடத்தில் அழகான ஈஷா கைவினைப் பொருட்கள், ஆடைகள், புகைப்படங்கள், புத்தகங்கள், ஒலி-ஒளிப் பொருட்கள், நினைவுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

ஆன்மிக அதிர்வுகள் நிரம்பிய புனிதவெளியான முழு தியானலிங்க வளாகமும், சந்தேகத்திற்கிடமின்றி, அளவற்ற மதிப்புடன் கூடிய ஆன்மிகச் சொத்தாக வருங்கால சந்ததியினருக்கு விளங்க உள்ளது.

-நிறைகிறது

மந்திரம் என்பது என்ன?

மந்திரம் என்ற சொல்லுக்கு எவர் ஒருவர் அதனை ஆத்ம சுத்தியோடும், உச்சரிப்பு பிழையின்றி தெளிவாகவும், பரம பக்தியோடும் உச்சரித்து பிரார்த்திக்கிறாரோ அவரை அம்மந்திரம் வெகுவாக ரட்சிக்கும் என்பது சாஸ்திரங்கள் எடுத்துரைக்கும் பொருளாகும்.

மந்திரோச்சாரணம் புரிபவர் தாம் உச்சரிக்கும் மந்திரத்தின்மீதும், அம்மந்திரத்தின் உள்ளீடான தேவதையினிடத்தும் மற்றும் அந்த மந்திரத்தை உபதேசித்த ஆசார்யரிடத்தும் விழுமிய பக்தியும் விசுவாசமும் கொண்டிருக்க வேண்டும்.

அவர் கொண்டுள்ள விசேடமான நம்பிக்கையில் ஆசார்யர் திருப்தியடைந்து மந்திர தேவதையும் பிரீதி கொள்ளுமானால், உச்சரிக்கப்படும் புனிதச் சொற்கள் உபாசனை புரிபவருக்கு சர்வ மங்களங்களையும் அள்ளித் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தொகுப்பு ம.கி.ச.